**கொலன்ன பிரதேச சபையி - 2023**
----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலன்ன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கொலன்ன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையின் 1.6.1 (ஓ) பந்தியில் (i), (ii), (iii) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஏல விற்பனை செய்யப்பட்ட 2 வாகனங்களின் பெறுமதி ரூபா 315,000 தொகை கணக்குகளில் இருந்து அகற்றியிருக்கவில்லை. | 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நூலகப் புத்தகங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் மழைநீர் பீலிகள் கிரயம் ரூபா 1,173,146 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2020 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் படி மோட்டார் வாகனங்களின் பெறுமதியை விட ரூபா 8,209,537 தொகை மிகையாக | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்கள் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | ஊழியர் கடன்வட்டி வருமானம் ரூபா 206,825 தொகை பிழையான முறையில் ஊழியர் கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | நிலையான வைப்புக்கள் வட்டி ரூபா 234,002 தொகை வட்டி வருமானக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக பெற வேண்டிய வைப்புக்கள் வட்டி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | பிழையான நாட்குறிப்பு பதிவு மேற்கொள்தலின் காரணமாக நிலுவை மூலதன உதவி மீதி ரூபா 10,581,262 இனால் அதிகரித்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | முன்னைய ஆண்டுகளுக்கான நிர்மாண வேலைக் கடன்பட்டோர் ரூபா 25,633,709 தொகை 2023 ஆண்டில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | முன்னைய ஆண்டிற்கான செலுத்துகை கோபுர வருமானம் மற்றும் அறிவித்தல் பலகை கட்டணம் ரூபா 70,850 தொகை 2023 ஆண்டின் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | 07 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் படி மீதிகள் மற்றும் துணைப் பதிவேட்டு மீதிகளின் இடையே ரூபா 1,093,303 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | 2022 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலமும் சரி செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (i) | சேதனப் பசளை செயற்களத்தின் கிரயம் ரூபா 573,787 தொகை மிகையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ii) | ரூபா 1,164,487 தொகைக்கான வாகன முற்றம், இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் பெறுமதியுடன் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | தொழிலாளர் நாளாந்த சம்பளக் கொடுப்பனவு ரூபா 110,525 தொகை பெற வேண்டிய சம்பளங்கள் மற்றும் மந்திரிமார் படி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 48,222,679 தொகைக்கான நிலுவை மூலதன உதவி மீதிக்குரிய விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்கான இறுதிக் கணக்கு அறிக்கையில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரிவான அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371(5) இன் படி, 1998 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 33,000 இற்கான முற்பணமொன்று தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,517,080 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,947,409 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 825,300 | 1,265,284 | 1,326,984 | 299,419 | 753,700 | 1,055,365 | 1,118,915 | 360,729 |
| வாடகை | 5,920,568 | 3,972,898 | 4,103,143 | 276,034 | 5,165,914 | 3,624,433 | 3,494,522 | 2,443,126 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,704,200 | 3,560,234 | 3,560,234 | - | 1,115,500 | 973,580 | 973,580 | - |
| ஏனைய வருமானங்கள் | 7,746,542 | 8,398,301 | 8,384,301 | - | 3,316,542 | 3,316,542 | 1,046,258 | - |
| | 20,196,610 | 17,196,817 | 17,388,662 | 575,453 | 10,351,656 | 8,969,920 | 6,633,275 | 2,803,855 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி பிரதேசதங்களிலிருந்து வீதவரி அறவீடு செய்வதற்காக 2023 திசெம்பர் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பிரதேசங்களில் ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்த பின்னர் வீதவரி அறவிடுகின்றேன். | பெற வேண்டிய வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 29 தரை வாடகை அலகுகள் 1983 ஆண்டு முதல் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் வழங்கப்பட்டு இருந்தது. 2010 ஆண்டின் பின்னர் அந்த ஆதனங்களின் பெறுமதி மதிப்பீட்டு கட்டணத்தை திருத்தியமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தரைவாடகை பெறுமதி மதிப்பீடு புதிய கட்டணம் தீர்மானிக்கப்பட்ட பின்னர் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உடன்படிக்கை மேற்கொள்வதற்கு மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டணம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 செலுத்துகை கோபுரங்கள் மற்றும் கட்டிட அனுமதிப்பத்திரங்களுக்காக ஒழுங்குபடுத்தல் கட்டணம் ரூபா 76,259 தொகை குறைவாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட துணை விதிகளுக்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரித்த பின்னர் அதன்படி கட்டணம் அறவிடப்படும். | குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முககாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நாளாந்தம் சேகரமாகும் உக்கக் கூடிய குப்பைகளின் எண்ணிக்கை சுமாராக 140 கிலோகிராம்கள் காணப்படும் போது ரூபா 1,575,000 இற்கான 6,000 கிலோகிராம் கொள்ளளவு கொண்ட ஹலர் இயந்திரம் ஒன்று 2021 திசெம்பர் மாதம் கொள்வனவு செய்திருந்தது. போதியளவாக குப்பைகள் சேகரிக்கப்படாமையால் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாத்திரம் அது செயற்படுத்தப்பட்டு இருந்தது. அதே போல், கூட்டுத்தொகை ரூபா 1,520,000 இற்கான டிபர் இயந்திரம் ஒன்று மற்றும் பேலர் இயந்திரம் ஒன்று பல வருட காலம் முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | குப்பை முகாமைத்துவ அலகுகள் எதிர்காலத்தில் விரிவாக்குவதற்கு நேரிடுவதனால் அதன்படி இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது சேதனப் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பேலர் இயந்திரமும் பயன்படுத்தப்படுகின்றது. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொலொன்ன நீர் செயற்திட்டத்தின் நீர் குடிப்பதற்கு பொருத்தமாக காணப்படாமையால் அங்கு நீர் வழங்களை தொற்று நீக்கும் படியும் நீர் களஞ்சியப்படுத்தும் இடத்தை வாரத்துக்கு ஒரு முறை சுத்தம் செய்யும் படியும் கொலொன்ன சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அறிவுரை வழங்கியிருந்த போதிலும் அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. புலுதொட்ட நீர் செயற்திட்டத்திற்காக 2017 பெப்ரவரி மாதத்தின் பின்னர் நீர் தரப் பரிசோதனை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றமையால் சுகாதார பாதுகாப்பு முறை கடைபிடிக்கும் படி நீர் நுகர்வோருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. கொலொன்ன பிரதேச சபைக்கு நீர் வழங்கள் சபையினாலும் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. | சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொலொன்ன பொது கழிவறை அமைந்துள்ள 2 ரூட் அளவான காணி கைவிடப்பட்டு இருப்பதனால் அங்கீகாரமின்றி ஒருவர் தனதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியை நில அளவை செய்யும் கருமங்கள் முடிவடைந்த பின்னர் சட்ட ரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 02 பாதைகளுக்கு ரூபா 1,926,442 தொகை செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த கொங்கிரீட் வேலைகளில் காணப்பட வேண்டிய நியமங்கள் தரப் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தி இருக்கவில்லை. | தொழிநுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வை கிடைத்திருந்தது. அதன் காரணமாக மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளல் தேவைப்படாது. | கொங்கிரீட் வேலைகளுக்காக தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |